2005 பிப்ரவரி 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

(ஆ) வினா எழவில்லை.

50—

தானியக் களம் அமைத்தல்

வினா எண் 26266—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பொச்சரம்பட்டி கிராமத்தில் விவசாயிகளின் நலனைக் கருதி தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பொச்சரம்பட்டி கிராமத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர் களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. மறைவுற்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் குடும்பத்திற்கும் மற்றவர்க்கும் நிதியுதவி வழங்கியது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தருவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, அதாவது 3-2-2005 அன்று இந்த அவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பாரதிய ஜனதா கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள், கொலையுண்ட சங்கரராமன் குடும்பத்திற்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 பிப்ரவரி 4

5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளபோது மறைந்த சட்டமன்ற உறுப்பினரான திரு. கே. சுதர்சனம் அவர்களது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டுள்ளதாக ஆதங்கப்பட்டுக் கொண்டார். இந்த இரண்டு நிகழ்வுகளில் வழங்கப்பட்ட நிதியுதவி பற்றிய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

முதலமைச்சர் தனது தேர்ந்த விருப்பத்தின்பேரில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கலாம். இதன் அடிப்படையில்தான் கொலை செய்யப்பட்ட திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதியுதவியை நான் வழங்கினேன். கொலையுண்ட சங்கரராமன் அவர்களின் மனைவி திருமதி பத்மா தங்களது குடும்பத் தலைவர் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டுவிட்டதால் வருவாய் ஏதுமின்றி தங்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்றும், இதனால் தங்களது மகன் மற்றும் மகள் இருவரும் தொடர்ந்து கல்வி கற்க இயலாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, தாங்கள் தொடர்ந்து வாழ்க்கை நடத்த நிதியுதவி வழங்க வேண்டுமென்று வேண்டி கோரிக்கை மனு கொடுத்தார். அதனைப் பரிவுடன் பரிசீலித்து அவர்களின் தேவையறிந்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்கினேன்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பதவியில் இருந்தபோது உயிரிழந்தார். அவ்வாறு ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருக்கின்றபோது மரணம் அடைந்தால் அரசு விதிகளின்படி அவரது வாரிசுதாரர்களுக்கு ஒட்டுமொத்த படியாக, அதாவது lump sum allowance-ஆக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கலாம். இதன்படிதான் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இதேபோலத்தான் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் ஒட்டுமொத்த படி வழங்கப்பட்டது. திரு. கே. சுதர்சனம் அவர்களது குடும்பமோ, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது குடும்பமோ வறுமையில் இல்லை. எனவே, திரு. கே. சுதர்சனம் அவர்களது குடும்பத்திற்கும், திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது குடும்பத்திற்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து எந்த நிதியுதவியும் வழங்க வேண்டிய தேவை எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

தங்களது கடமையில் அசாதாரண தைரியத்துடனும், அளவற்ற ஈடுபாடும் கொண்டு பணியாற்றி உயிரிழந்த அரசு அலுவலர்களுக்கு, பணியில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டைக் கௌரவிக்கும் வகையில் அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கியுள்ளேன். இந்த அடிப்படையில்தான் காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்தில் கள்ளத்தனமாக மணல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்று அதன்காரணமாக 20-4-2003 அன்று கொல்லப்பட்ட வருவாய் ஆய்வர் திரு. சண்முகசுந்தரம், திருப்பெரும்புதூர் வட்டம், எருமையூர் கிராமத்தில் கள்ளத்தனமாக கருங்கல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்றதில் லாரி மோதி 13-9-2003 அன்று உயிரிழந்த வட்டாட்சியர் திரு. ஜி. புண்ணியகோட்டி, காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், உதயம்பாக்கம், மணப்பாக்கம் கிராமப் பகுதிகளில் கள்ளத்தனமாக மணல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்றதில் 11-12-2004 அன்று உயிரிழந்த மண்டல துணை வட்டாட்சியர் திரு. வெங்கடேசன் ஆகியோரது குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வழங்கினேன்.

சுனாமி தாக்கிய கடலூர் மாவட்டம், கிள்ளை மற்றும் பரங்கிப்பேட்டை கிராமங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்ட சிதம்பரம் வட்டாட்சியர் திரு. எம். முஸ்தபா கமால் பாட்சா மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததும், அரசு கடமை ஆற்றுவதில் அவர் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டைக் கௌரவிக்கும் விதத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வழங்கினேன்.

இதேபோல், 21-11-2002 அன்று யானைத் தந்தங்கள் திருடும் கும்பலைப் பிடித்திட ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது காட்டு யானைகளால் மிதியுண்டு, உயிரிழந்த கோவை வனக் கோட்ட வனக் காப்பாளர் திரு. சுரேந்திர ராஜா அவர்களது குடும்பத்தினரின் ஏழ்மையான சூழ்நிலையைக் கருதி 5 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணையிட்டேன்.

முற்பகல் 10-05

வன உயிரினத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தபோது கள்ளத்தனமாக வன விலங்குகளை வேட்டையாடும் கும்பலால், 20-10-2002 அன்று கொல்லப்பட்ட முதுமலை வன உயிரினக் காப்பக வேட்டைத் தடுப்புக் காவலர் திரு. சீகன் அவர்களது குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நிதி உதவியை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கினேன்.

13-12-2003 அன்று மன்னார்குடியிலிருந்து திருவாரூருக்குச் சென்றுகொண்டிருந்த தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது பேருந்தில் இருந்த துவாரம் வழியாக கீழே விழுந்ததில் உயிரிழந்த செல்வி கௌசல்யா என்னும் சிறுமியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டேன்.

எதிர்பாராத விபத்துகள் ஏற்படும்போது அந்த விபத்துகளில் உயிர் இழப்போரின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும், பலத்த காயம் அடைவோருக்கு 15 ஆயிரம் ரூபாயும், சாதாரண காயம் அடைவோருக்கு 6 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதுவன்றி வறுமையான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்ற பொதுமக்கள் மின்சாரம் தாக்குதல், இடி மின்னல் தாக்குதல், மண் சரிவில் சிக்குதல் முதலான இயற்கை இடர்ப்பாடுகளால் உயிர் இழக்க நேரிடும்போதும் அவர்களது குடும்பச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அக்குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கி, ஆணையிடுகிறேன். இதுபோன்ற நிகழ்வுகளில், அந்தந்த சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, தேவையான நிதி உதவிகளை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நான் வழங்கி வருகிறேன்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் அவர்கள், என்னுடைய இயக்கத்தைச் சார்ந்தவர். என்மீது பற்றும் பாசமும், உடையவர். வேறு எவரைக்காட்டிலும் அவரது குடும்பத்தின்மீது எனக்கு அக்கறை உண்டு. அந்தக் குடும்பத்திற்கு என்ன தேவை என்பதை நான் அறிவேன். எனவே, ஆடு நனைகிறதே என்று யாரும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).